**அ.வ.எண்: 76/2016** **நாள்: 24.07.2025**

வா.சா.5 - ஐயப்பன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. தாவா வழக்கில் சாட்சி சொல்ல யார் அழைத்தது என்றால் சுப்பையா பூசாரி என்பவர்அழைத்தார். நான் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து எதுவும் அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. தாவா வழக்கில் மு.ளு 76/2016 வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சுப்பையா என்பவர் மாணிக்கம் வகையறா மற்றும் அரசாங்கத்தின் மீது தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கான OS 49/2017 வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியாது. OS.76/2016 மற்றும் OS 49/2017 வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் OS 76-2016 என்ற வழக்கில் சுப்பையா என்பவர் பூசாரி உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார், OS 49-2017க்கு என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் தாவா கோவில் அமைந்துள்ள ஊரில் வசிக்கவில்லை என்றால் சரிதான்.

2. தாவா கோவில் என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண் 228/2 உள்ளது, அதன் விஸ்தீரணம் சுமார் 6 ஏக்கர் ஆகும். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் என்ன பிரச்சனை என்ற விவரம் எனக்கு தெரியும். தாவா வழக்கின் பிரதிவாதிகளை தெரியுமா என்றால் மாணிக்கம் வகையறாக்களை தெரியும், பிரதிவாதிகளை நேரடியாக தெரியாது. பிரதிவாதிகளை நான் பார்த்ததும் இல்லை. பூசாரி பேரவை என்பது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதால் என்றால் அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி பேரவையின் பதிவு எண். 535 ஆகும். அது பதிவு செய்யப்பட்ட வருடம் 1996 ஆகும். நான் மேற்படி பேரவையின் மாவட்ட இணை அமைப்பாளர் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்திற்கு யார் விவரங்கள் கூறினார் என்றால் நான், சுப்பையா அண்ணன், கணேசன் ஆகியோர் விவரங்கள் கூறினோம். மேற்படி சுப்பையாவின் அப்பா பெயர் கருப்பன் ஆகும். தாவா வழக்கின் 2ம் வாதியான கணேசன் என்பவரும், சுப்பையா என்பவரும் உடன்பிறந்த சகோதர் என்றால் சரிதான். தாவா பிராதில் கணேசனின் தகப்பனார் பெயர் என்வென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சுப்பையா எப்பொழுது, யாருக்கு சுவீகார மகனாக சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி சுப்பையா என்பவர் தேசிய நெடுஞ்சாலைதுறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற நபர் என்றால் சரிதான். மேற்படி சுப்பையாவிற்கு தாவா கோவில் அமைந்துள்ள ஊரில் மற்ற சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான்.

4. மேற்படி சுப்பையா பணியில் இருந்தபோது அவரது ஆவணங்களிலும், மற்றும் அவர் பெயரில் உள்ள பட்டாகளிலும் காளிமுத்து மகன் சுப்பையா என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் மேற்படி சுப்பையா காளிமுத்து என்பவரின் மகனா அல்லது கருப்பன் என்பவரது மகனா என்பதற்கான ஆவணங்களை நான் நேரில் பார்த்தது இல்லை என்றால் சரிதான். மேற்படி சுப்பையா என்பவர் யாருடைய வாரிசு என்ற முறையில் கோவிலில் உரிமை கொண்டாடி வருகிறார் என்றால் கருப்பன் என்பவரின் மகன் என்ற முறையில் தான் உரிமை கொண்டாடுகிறார். மேற்படி சுப்பையா என்பவர் கருப்பன் மகன் தான் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் கோவிலில் சாமிக்கு செலுத்தப்பட்ட தண்டையில் கருப்பையா மகன் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மேற்படி கருப்பனுக்கு பூர்விக ஊர் என்ன என்பது எனக்கு தெரியாது. மேற்படி கருப்பனின் மனைவி யார் என்றும், அவருடைய வாரிசுகள் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் யார் முன்னிலையில் மேற்படி சுப்பையாவை கருப்பன் என்பவர் சுவீகாரம் எடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா கோவில் எத்தனை கிராமங்களுக்கு பத்தியப்பட்ட கோவில் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா கோவிலில் தற்பொழுது நிர்வாகி, செயலாளர், பொருளாளர் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா கோவிலில் பொதுவாக எந்த தேதியில் காப்பு கட்டி எப்பொழுது திருவிழா நடைபெறும் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். தாவா கோவிலில் பரம்பரை பரம்பரையாக யார் பூசாரியாக இருந்து வருகிறார் என்றால் சுப்பையா மற்றும் கணேசன் என்பவரின் குடும்பம் தான் இருந்து வருகிறது.

6. மேற்படி கணேசன் என்பவர் பூசாரி இருந்ததற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை, ஆயுள் உறுப்பினர் அட்டை என்பது பூசாரி ஒருவருக்கு மட்டும் தான் வழங்கப்படும், அதன் பின்பு அவர்களின் வாரிசுகளுக்கு தான் வழங்கப்படும். மேற்படி சுப்பையாவிற்கு முன்பு யாருக்கு ஆயுள் உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் யாருக்கும் வழங்கப்படவில்லை, 2013ம் ஆண்டில் சுப்பையா என்பவருக்கு தான் வழங்கப்பட்டது. எங்களது பேரவையில் யாருக்கு ஆயுள் உறுப்பினர் அட்டை வழங்க வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் உள்ளதா என்றால் விதி முறை உள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கோ, செல்வந்தர்களுக்கோ மேற்படி ஆயுள் உறுப்பினர் அட்டை வழங்குவது இல்லை என்றால் அவர்கள் பூசாரியாக இருந்தால் வழங்குவது உண்டு.

7. மேற்படி ஆயுள் உறுப்பினர் அட்டை வழங்குவதற்கு முன்பு கிராம மக்களை விசாரித்து வாக்குமூலம் பெற வேண்டும் என்றால் சரிதான். 2013ம் ஆண்டு சுப்பையா என்வருக்கு மேற்படி ஆயுள் உறுப்பினர் அட்டை வழங்குவதற்கு முன்பு கிராம மக்களிடம் விசாரித்தோமா என்றால் விசாரித்தோம், அவர்களது பெயர் நினைவில் இல்லை. மேற்படி

விசாரணை தொடர்பாக ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் வாய்மொழியாக தான் விசாரித்தோம் ஆவணங்கள் எதுவும் இல்லை. தாவா கோவில் ஆனது கிராம கோவில் தான் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிற்கு கீழ் வராது என்றால் சரிதான். மேற்படி கோவில் பூசாரிகள் கிராம மக்களின் நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டவர்கள் என்றால் சரிதான்.

8. மேற்படி பூசாரி பேரவையின் உறுப்பினர்கள் கிராம கோவில்கள் சம்மந்தமாக பிரச்சனை ஏற்படும் போது கிராம மக்களின் முடிவிற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு கிராம மக்கள் எடுக்கும் முடிவில் பூசாரி பேரவை சேர்ந்தவர்கள் தலையிட முடியாது என்றால் சரிதான். மேற்படி பூசாரி பேரவையில் இருந்து மாதம் வருமானம் கொடுக்கப்படுமா என்றால் மாத வருமானம் கிடையாது, ஓய்வு ஊதியம் வழங்கப்படும். பூசாரி பேரவையின் மாநில அமைப்பாளர் தாவா வழக்கிற்காக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பூசாரி பேரவையின் அட்டையை எத்தனை ஆண்டிற்கு ஒரு முறை கால நீட்டிப்பு செய்ய வேண்டும் என்றால் உறுப்பினராக இருக்கும் பட்சத்தில் கால நீட்டிப்பு செய்ய தேவையில்லை.

9. தாவா கோவிலில் நடக்கும் விஷேசங்களில் நான் கலந்து கொண்டது இல்லை என்றால் சரிதான். தாவா வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதி கேட்டு கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**